வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 116/2020

வழக்கு சாட்சி LW4 /PW2

| பெயர் | குமார் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | ராஜமாணிக்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 46 |

தேதி 12.03.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். 27.03.2016 அன்று காலை 11.30 மணியளவில் கில்பன் நகர் அருகே பிள்ளையார் கோயில் அருகே மிளகாய் பொடி தூவி எனதுதாயார் நடந்து சென்றபோது அவர் அணிந்திருந்த கழுத்தில் இருந்த 4 ¼ சவரம் மதிப்புள்ள தங்க செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்றும், மிளகாய் தூள் தூவியதால் எனது தயாரால் பார்க்க முடியவில்லை. அக்கம் பக்கத்தினர் அந்த நபரை பிடித்து அங்கு அருகில் இருந்த காவலரிடம் ஒப்படைத்தனர். மேலும் எனது தாயாரின் செயினையும், அவரிடமிருந்து வாங்கி கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தின்போது அம்மாவுடன் இருந்தேனா என்றால் இல்லை. நான் எனது அம்மாவை பார்க்க சம்பவ இடம் சென்றபோது எதிரி அங்கு இருந்தாரா என்றால் இல்லை. காவல் நிலையம் அழைத்து சென்றுவிட்டார்கள். நான் அங்கு சென்று பார்த்தேன். புகார் எங்கு அளித்தோம் என்றால் காவல் நிலையம். எனது அம்மா கூறியதால்தான் எனக்கு சம்பவம் குறித்து தெரியும் என்பதால் நான் எதிரிக்கு எதிராக பொய்யாக எனது அம்மாவிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.